**THE LABOUR COURT, SALEM**
**C.P.No. 10 of 2016**

**<u>18.07.2023</u>**

**RW2 – சந்திரசேகரன் மீண்டும் வரவழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எதிர்மனுதாரருக்கு சாட்சியம் அளிக்கிறேன். நான் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியம் அளிக்கிறேன். நான் சாடசியம் அளிப்பதற்கு அதிகாரக்கடிதம் கொடுக்கும்போது பணியில் இருந்தேன். தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளேன். பணி ஓய்வு பெற்ற பின் தொடர்ந்து சாட்சியம் அளிக்க எந்தவொரு அனுமதி கடிதமும் கொடுக்கவில்லை. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் விபரம் எனக்கு தெரியும். மனுதாரரின் பணி ஓய்வு தேதி 31.05.2015 ஆகும். பணி ஓய்வுக்கு முன்னர் பணி ஓய்வு முன் கூட்டு (Commutation) தொகையாக ரூ.2,62,860/– கேட்டுள்ளார். மனுதாரர் 27.11.1987 பணியில் சேர்ந்து முதல் ஓய்வு தேதியான 31.05.2015 வரை காலத்திற்குரிய ஓய்வூதிய முன்கூட்டுத்தொகையை கேட்டுள்ளார். தொழிலாளி முதலில் பணியில் அமர்ந்த தேதியிலிருந்து ஓய்வூதியம் பெற தகுதியுள்ளவர் என்றால் சரியல்ல. தொழிலாளியை வரன்முறை படுத்திய தேதியிலிருந்துதான் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர். அதற்கான விதி உள்ளது. அந்த விதியை அடுத்த விசாரணையில் தாக்கல் செய்கிறேன்.

குறுக்கு விசாரணை– ஒத்திவைக்கப்படுகிறது.

Sd (Dr.P. Murugan),
Presiding Officer,
Labour Court, Salem.